# நான்காவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோயம்புத்தூர்

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வியாழக்கிழமை 30-ம் நாள் இந்த சாட்சியின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது ஏற்பாட்டின்படி) செல்வி.யாழினி, பி.ஏ.,எல்.எல்.பி., (Hons), நான்காவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| தேதி | - | 30.04.2026 |
| அசல் வழக்கு எண் | - | 977/2016 C/W 915/2016, 853/2016 and 684/2018 |
| பெயர் | - | கனகலட்சுமி - **பி.வா.சா -1** |

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-**

1. sub registrar உத்தரவு போடப்பட்டது எதிர்த்து Appeal ஏதேனும் செய்தேனா என்றால் தெரியவில்லை, வக்கிலிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் உத்தரவு எதிர்த்து Appeal ஏதும் செய்யவில்லை என்றால் தெரியவில்லை. சொத்து சமந்தமாக வேறு இரு வழக்குகள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. TN38 L 9313 car விற்பனை செய்து பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சுப்புலட்சுமி எங்கு இருக்கிறார் தெரியுமா என்றால் கோயமுத்தூரில் இருக்கிறார், விலாசம் தெரியுமா என்றால் தெரியாது. சேகர் நாயுடுக்கு கடிதம் எழுதினேனா என்றால் இல்லை தொலைபேசியில் தான் பேசுவேன் அவருடைய கைபேசி எண் தற்போது என்னிடம் உள்ள கைபேசியில் இல்லை. சேகர் நாயுடு எனக்கு எழுதி கொடுத்த அதிகார பத்திரம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு சாட்சியம் அளிக்க எனக்கு எந்த அரிகதி இல்லை என்றால் சரியல்ல.

2. சேகர் நாயுடுக்கு எழுதி கொடுத்த Settlement பத்திரம் செல்லதக்கதல்ல அதனால் தான் sub registrar உத்தரவை எதிர்த்து Appeal ஏதும் செய்யவில்லை என்றால் சரியல்ல. சீனிவாசன் இரண்டாவது மனைவியை பார்த்துள்ளேனா என்றால் 10

வருடத்திற்கு முன்பு பார்த்தேன். அவர்களின் குழந்தைளை 35 வருடத்திற்கு முன்பு பார்த்தேன். வழக்கு நடந்து கொண்டிருப்பதை பற்றி சீனிவாசன் 2 வது மனைவிக்கு அவரது குழந்தைக்கும் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி அவர்கள் வழக்கு சமந்தமாக நடவடிக்கை எடுக்க சொல்லி கேட்டர்களா என்றால் இல்லை. இந்த வழக்கில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மேலும் 2 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

**Sd/.N.Yazhini**
**IV ADM, CBE**